

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆவடி மாநகராட்சி 2 வது மண்டலம் திருமுல்லைவாயில் பகுதியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகம் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் முகாமை தொடங்கி வைத்து உடனடியாக விண்ணப்பித்தவர்களுக்கு பல்வேறு சான்றிதழ்கள் அரசுத்துறை சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் மண்டல குழு தலைவர் அமுதா பேபிசேகர், ஆவடி மாநகரப் பொறுப்பாளர் சன்.பிரகாஷ், மற்றும் அரசுத்துறை அதிகாரிகள், பொதுமக்கள், கழக நிர்வாகிகள், பலர் கலந்து கொண்டனர்.

## மயிலாப்பூர் சட்டமன்றத் தொகுதியில்

# ரூ.82.63 கோடி மதிப்பீட்டில் அடுக்குமாடி குடியிருப்புகளின் கட்டுமானப் பணி!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேரில் ஆய்வு!

சென்னை, ஆக.2

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேற்று (1.8.2025) தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் மயிலாப்பூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஏகாம்பரம் பிள்ளை மற்றும் முனுசாமி பிள்ளைத்தெரு திட்டப் பகுதியில் ரூபாய் 40.08 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் 240 அடுக்கு மாடி குடியிருப்புகள் கட்டுமான பணியையும் , சீனிவாசபுரம் திட்ட பகுதியில் ரூபாய் 42.55 கோடி மதிப்பீட்டில் 396 அடுக்கு மாடி குடியிருப்புகளின் கட்டுமான பணிகளையும் ஆய்வு செய்தார்.

அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்கள் பேசுகையில், தமிழ்நாட்டில் வாழும் நகர்ப்புற ஏழைக் குடும்பங்களுக்கு அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய வீட்டுவசதியினை ஏற்படுத்தி தரும் வகையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1970ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் தொடங்கப்பட்டது.

நகர்ப்புற ஏழைக் குடும்பங்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த குடிநீர், சுகாதாரம், மின்சாரம், போக்குவரத்து, கல்வி, மருத்துவ வசதி, திடக்கழிவு மேலாண்மை, பொது வெளியிடம் போன்ற வசதிகளுடன் வீட்டுவசதி ஏற்படுத்துவது அவசியம் என்று கருதி முதலமைச்சர் அவர்கள் *1.9.2021* அன்று தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பெயரினை தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் என்று பெயர் மாற்றம் செய்து ஆணையிட்டார்.

குடிசைகளை மாற்றுவது மட்டுமல்ல, குடிசைகளில் வாழும் மக்களுடைய வாழ்வாதாரத்தையும், வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்திட வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்தப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு பல்வேறு புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஏகாம்பரம் பிள்ளை மற்றும் முனுசாமி பிள்ளை தெரு திட்டப்பகுதியில் ரூ.*40.08* கோடி மதிப்பீட்டில் *240* அடுக்குமாடி குடியிருப்புகள் தரை *4* மற்றும் *5* தளங்களுடன் கட்டப்பட்டு வருகின்றன. இத்திட்டப்பகுதி மறுகட்டுமான திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வருகின்றது. எனவே மறுகட்டுமான திட்ட பயனாளிகளுக்கு ரூ.*1.50* இலட்சம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கட்டுமான பணியை துரிதப்படுத்தி விரைவில் முடிக்க வேண்டும் என பொறியாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

மேலும், சீனிவாசபுரம் திட்டப்பகுதியில் ரூ.*42.55* கோடி மதிப்பீட்டில் *396* அடுக்குமாடி குடியிருப்புகள் தூண் மற்றும் *14* தளங்களுடன் கட்டப்பட்டு வருகின்றன. இத்திட்டப்பகுதி அனைவருக்கும் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வருகின்றது. பயனாளிகள் பங்கு தொகையாக ரூ.*6.91* இலட்சம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டப்பகுதி விரைவில் திறந்து வைக்கப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்படும் என தெரிவித்தார்.

இன்றைய தினம் ஆய்வு செய்யப்பட்ட திட்டப்பகுதிகள் ஒவ்வொன்றும் ஒரு பல்நோக்கு அறை, படுக்கை அறை, சமையல் அறை மற்றும் கழிவறை ஆகிய வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது. மேலும், அனைத்து குடியிருப்பு வளாகங்களும், சாலை வசதி, குடிநீர் வசதி, கழிவு நீரேற்று வசதி, சிறுவர் பூங்கா, மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு , தெரு விளக்குகள் மற்றும் தீயணைப்பு வசதிகள் போன்ற வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் திருமதி ஸ்ரேயா பி.சிங், வாரிய இணை மேலாண்மை இயக்குநர் திருமதி ந.ப்ரியா ரவிச்சந்திரன், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, தலைமை பொறியாளர்கள் வி.எஸ்.கிருஷ்ணசாமி, சு.லால் பகதூர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

## கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம்

## ஓசூர் மாநகரம்

## மேற்கு பகுதி - 6வது வட்டம் மற்றும் வடக்கு பகுதி 13வது வட்ட

# பொறுப்பாளர் - பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நியமனம்

## தலைமைக் கழக அறிவிப்பு

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம், ஓசூர் மாநகரம், மேற்கு பகுதியில் உள்ள 6வது வட்டம் மற்றும் வடக்கு பகுதியில் உள்ள 13வது வட்டம் ஆகிய வட்டங்களில் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற வட்டக் கழகப் பொறுப்பாளர் மற்றும் பொறுப்புக்குழு உறுப்பினர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

6வது வட்டம்

வட்டப் பொறுப்பாளர் :எம். சந்தோஷ்குமார், 785/4, கே.சி.சி. நகர், ஓசூர். கிருஷ்ணகிரி மாவட்டம்.

பொறுப்புக்குழு உறுப்பினர்கள்:
1. முருகதாஸ், ஓசூர்
2. நஞ்சப்பா, ஓசூர்
3. கணேஷ், ஓசூர்
4. புனிதா, ஓசூர்
5. கவுதம், ஓசூர்
6. சரவணன், ஓசூர்
7. முருகேஷ், ஓசூர்
8. மஞ்சுநாத், ஓசூர்
9. செந்தில்குமார், ஓசூர்
10. செல்வம், ஓசூர்

13வது வட்டம்

வட்டப் பொறுப்பாளர்: எம்.மோகன், 11/18, முதல் தெரு, கிருஷ்ணா நகர், ஓசூர். கிருஷ்ணகிரி மாவட்டம்.

பொறுப்புக்குழு உறுப்பினர்கள்:
1. கண்ணன் ஓசூர்
2. ரகு, ஓசூர்
3. முருகேசன், ஓசூர்
4. மரகதம், ஓசூர்
5. பாண்டியன், ஓசூர்
6. குணசேகரன், ஓசூர்
7. உதயகுமார், ஓசூர்
8. முருகேஷ், ஓசூர்
9. சுரேஷ், ஓசூர்
10. சேகர், ஓசூர்

**"அண்ணா அறிவாலயம்"**
**சென்னை 18.**
**நாள் : 01.08.2025.**

**துரைமுருகன்**
**பொதுச்செயலாளர்,**
**தி.மு.க.**

---



மதுரவாயல் தெற்குப் பகுதி, 153 வது வட்டத்திற்கு உட்பட்ட போரூர் அரசினர் ஆண்கள் மேல்நிலை பள்ளியில் 35 சி.சி.டி.வி. கண்காணிப்பு படப்பிடிப்பு கருவிகள், வகுப்பறைக்கு தேவையான மின்விசிறிகள், குடிநீர் உள்ளிட்ட பல்வேறு செயல்பாடுகளை கழக நிர்வாகிகளையும், தன்னார்வலர்களையும் ஒருங்கிணைத்து காரம்பாக்கம் க. கணபதி எம்.எல்.ஏ. பயன்பாட்டிற்கு கொண்டுவந்தார், இதில் வட்டக் கழகச் செயலாளர் தி.சார்லஸ், மாமன்ற உறுப்பினர் சாந்தி இராமலிங்கம், பால் பாண்டியன், க.நடராஜன், இராமலிங்கம், தினகரன், பால்ரவி, ஸ்டான்லி, விஜயா, ஏழுமலை, செல்லமுத்து, பாலாஜி, தினா (எ) தினேஷ், மோகன், உதயகுமார், சரத், சூர்யபிரகாஷ், காளீஸ்வரி, ரங்கா, பஷீர், கோபி, கிரிஸ்லர், பன்னீர், தென்னரசு, தூயவன், பார்த்திபன், கண்ணன், வேதகிரி, ராஜேந்திரன், ஷியாம், சுகுமார், நவீன், விக்கி, ஜான்சி, ராஜகண்ணு, நாகராஜ், பூங்கொடி, தீபன், மகேஷ், முனுசாமி, பிரகாஷ், கிளாரா, சபரி, தனசேகர், செல்வம்பாணி, பிரபா, மனோகர், காளிதாஸ், ரவி, ஜனார்த்தனன், அழகர் செந்தில், ஜெயவீரன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

---

## புதுக்கோட்டை தெற்கு மாவட்டம்

## அரிமளம் வடக்கு ஒன்றியம்,

# அரிமளம் பேரூர் மாவட்ட பிரதிநிதி தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல்

## தலைமைக் கழக அறிவிப்பு

புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தில் உள்ள அரிமளம் வடக்கு ஒன்றியம், அரிமளம் பேரூர் மாவட்டப் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட வெ.மணி அவர்கள் மறைவெய்திய காரணத்தால்;

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம், அரிமளம் பேரூர், மாவட்ட பிரதிநிதி பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து,

2025 ஆகஸ்ட் 4 (திங்கட் கிழமை) அன்று ஒரு பொறுப்புக்கு ரூ.500/ வீதம் தலைமைக் கழகத்தில் கட்டணம் செலுத்தி இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

தகுதி விவரம்

பேரூர்க் கழக நிர்வாகப் பொறுப்புகளுக்கும், ஒன்றிய, மாவட்டப் பிரதிநிதிகளுக்கும் போட்டியிடுவோருக்கு வேட்பு மனுவில் முன்மொழிவோரும் – வழிமொழிவோரும், தொடர்புடைய பேரூர்க் கழகத்தில் அடங்கியுள்ள வார்டுகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகியாகவோ, பிரதிநிதியாகவோ இருத்தல் வேண்டும்.

வேட்புமனு படிவங்களை மாவட்டக் கழகச் செயலாளரிடம் ஒன்றுக்கு ரூ.25/ வீதம் செலுத்தி பெற்றுக் கொள்ளவும்.

**"அண்ணா அறிவாலயம்"**
**சென்னை 600 018.**
**நாள் : 01.08.2025.**

**துரைமுருகன்,**
**பொதுச்செயலாளர்,**
**தி.மு.க.**

---

# இதழியல் துறையில் முதுநிலை பட்டயப் படிப்பு விண்ணப்பிக்க கால நீட்டிப்பு!

சென்னை, ஆக.2-

*24.07.2025* அன்று துவங்கிய சென்னை இதழியல் கல்வி நிறுவனம் அளிக்கும் ஒரு வருட இதழியல் முதுநிலை பட்டயப் படிப்பின் மாணவர் சேர்க்கைக்கான கடைசி நாள் *03.08.2025* அன்று முடிவடைய உள்ள நிலையில், விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள் *10.08.2025* வரையில் நீடிக்கப்படுகிறது.

தமிழக அரசால் நிறுவப்பட்டுள்ள சென்னை இதழியல் கல்வி நிறுவனத்தில் அச்சு, தொலைக்காட்சி, வானொலி மற்றும் இணைய ஊடகங்களில் செயல்படுவதற்கான உயர்தர கல்வியை வழங்கும் வண்ணம் பாடத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இதன் முழு விவரத்தை அறியவும், முதுநிலைப் பட்டயப் படிப்பிற்காக விண்ணப்பிக்கவும் https://cij.tn.gov.in// என்ற இணைய தளத்தில் வசதி ஏற்படுத்தப்பட்டு உள்ளது. பெண்களும், ஆண்களும் பொறுப்புடன் கூடிய சிறந்த ஊடகவியலாளராக செயல்பட அனைத்து பயிற்சிகளும் அளிக்கப்படும் வகையில் பாடத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

அரசின் இந்த முன்னெடுப்பில் அனைவரும் பங்கு பெறும் விதத்தில், இந்த முதுநிலை பட்டயப் படிப்பின் கல்விக் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இணையதளம் வழியாக விண்ணப்பிக்க கடைசி நாள் *10.08.2025* ஆகும் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பொ. தனசேகரன்

### ஆகஸ்ட் 2 (2015)



**தனது இளமைக் காலம் முதல் கழகத்தில் ஈடுபாடு கொண்டு சென்னை, வேளச்சேரி பகுதியில் கழக வளர்ச்சிக்கு அரும் பணியாற்றியவர்.**

**1962ஆம் ஆண்டில் வேளச்சேரி கிளைக் கழகப் பொருளாளராக பொறுப்பு வகித்த இவர், தாமஸ்மலை ஒன்றிய பிரதிநிதி, வேளச்சேரி வட்டச் செயலாளர், வேளச்சேரி பகுதிச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றினார்.**

**1996–ல் சென்னை மாநகராட்சி 153–வது வார்டில் கழகத்தின் சார்பில் மாமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களை நன்மதிப்பை பெற்றவர்.**

**இந்தி எதிர்ப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

